# தர்மசாஸ்திரங்களில் பெண்: தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்மிருதி நூல்களை மையப்படுத்திய ஆய்வு

**By**

***செல்வகுமாரி சிவலிங்கம், & **ஜாஸ்மின் சுதா, த. க.**

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.*

***உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ), தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*தொன்மைப் பொதுவுடைமைச் சமுதாயத்தில் பெண்ணே ஆதிக்கம் பெற்றுக் காணப்பட்டாள். காலப் போக்கில் இந்நிலை மாறி தந்தை வழிச் சமுதாயம் நிலை கொண்டது. இதனால் பெண் ஆணுக்கு அடிமையானாள். ஏங்கில்ஸ் என்பவர் எழுதிய ''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' என்ற நூல், ''முதல் வர்க்க ஒடுக்க முறையோ பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்கு முறையோடு ஒன்றுபடுகிறது.'' எனக் கூறுகிறது. இவ்வாறு உலகளாவிய ரீதியில் தீவிரமாகக் காணப்பட்ட ஆண், பெண் வர்க்க வேறுபாடானது, பெண்கள் தங்களது அடிப்படை உரிமைகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு பெண் சமுதாயத்திற்கு மாபெரும் சவாலாக அமைந்தது. இதனால் பெண்கள் உடல் - உள ரீதியாகப் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளானார்கள். இந்து சமுதாயத்தில், ஸ்மிருதி நூல்களை அடிப்படையாகக் கொண்டு, அக்கால பெண்ணின் சமுதாய நிலையினை நோக்குகின்ற போது, ஸ்மிருதி நூல்களானவை ஆணாதிக்கத்தினை (Patriarchy) வலியுறுத்துகின்ற போதும் ஆங்காங்கே பெண் நலன் பேணுவனவாகவும் உள்ளன. அதாவது, மனுஸ்மிருதியானது ஒரு பெண் எப்போதும் ஆணினுடைய கட்டுப்பாட்டிலே வாழ வேண்டும் என்றதோடு, பெண்களைப் பாலின்ப வெறிப்பிடித்தவர்களாகவும் சிற்றின்பப் பிரியர்களாகவும் சித்திரித்துள்ளமையானது பெண்ணினது அடிப்படை உரிமை மறுப்பிற்கு எந்தளவிற்கு முக்கியத்துவமளித்துள்ளது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாகும். இருப்பினும், பிரஹஸ்பதி ஸ்மிருதியானது ஆண் குழந்தை இல்லாத ஒருவனுக்கு அவனுடைய மனைவியே அடுத்த வாரிசு எனவும் காத்யாயன ஸ்மிருதியானது, ''சௌதாயிக'' எனும் சொத்துரிமையில் கணவன் இறந்துவிட்டால் மனைவிக்கே சொத்துரிமை எனவும் கூறுவதாவது, ஸ்மிருதி நூல்களானவை பெண்ணினது உரிமையினையும் மேன்மையினையும் எடுத்தியம்பத் தவறவில்லை என்பதற்குச் சான்றாக அமைகின்றன. அந்தவகையில், ஸ்மிருதி நூல்களில் வெளிப்படும் பெண் பற்றிய சிந்தனைகளை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். வைதிக சம்பிரதாயங்களை எடுத்துரைக்கும் ஸ்மிருதி நூல்கள், பெண் பற்றிப் பேசுவதில் எத்தகைய முக்கியத்துவம் பெறுகிறது? என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். மகளிர் மாண்புரைப்பதில் இந்து மூலங்கள் - ஸ்மிருதி நூல்களுக்கு தனித்துவமான இடமுண்டு எனும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு நகர்கிறது. இந்து மூலங்கள் - தர்மசாஸ்திரங்கள் (ஸ்மிருதி நூல்கள்) முதலாம் நிலைத் தரவுகளாகவும் அவை தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளக் குறிப்புகள் ஆகியவற்றினை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு, சமூகவியல், ஒப்பீட்டு மற்றும் விபரண ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *தர்மசாஸ்திரங்கள், ஸ்மிருதி, பால்நிலை சமத்துவம், ஆணாதிக்கம், பெண்ணுரிமை.*

### முன்னுரை

வரலாற்றில் தோன்றிய முதல் சமுதாயமாகக் கருதப்படும் "தொன்மைப் பொதுவுடைமைச்" (கோவிந்தன், க., 2001, ப.3.) சமுதாயத்தில் பெண்ணே ஆதிக்கம் பெற்றுக் காணப்பட்டாள். காலப் போக்கில் இந்நிலை மாறி தந்தை வழிச் சமுதாயம் நிலை கொண்டது. இதனால் பெண் ஆணுக்கு அடிமையானாள். அதாவது, நிலக்கிழாரிய, முதலாளிய சமுதாய அமைப்பு முறைகளில் பெண், ஆணின் உடைமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டாள். இந்து சமுதாயத்தில் ஆரம்ப காலங்களில் பெண்ணின் நிலை பற்றி நோக்குகின்றபோது, ஆட்சி பொறுப்பினையும் சொத்துரிமையினையும் பெறும் அளவிற்கு அதிகாரமுடையவளாக இந்துப் பெண்கள் காணப்பட்டார்கள். இவ்வாறு உயர் நிலையில் காணப்பட்ட பெண் காலப்போக்கில், ஆணின் அடிமையாகவே கருதப்பட்டாள். உலக வரலாற்றிலும் இத்தகையதொரு நிலையே நிலவியது. ஏங்கில்ஸ் என்பவர் எழுதிய "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற நூல், "முதல் வர்க்க ஒடுக்க முறையோ பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்கு முறையோடு ஒன்றுபடுகிறது." எனக் கூறுகிறது. இச்சந்தர்ப்பத்தில், "ஆணுலகும் பெண்ணுலகும் ஒன்றல்ல, சமூக அமைப்பு மாற்றப்படும் வரை உலகம் ஆணுலகமாகவே நீடிக்கும்" எனக் கூறும் செ. கணேசலிங்கனின் கூற்று குறிப்பிடற்பாலது. ஆனால், தர்மசாஸ்திரங்களானவை ஆணாதிக்க அடிமை நிலையில் பெண்ணை நோக்குகின்ற போதும் ஆங்காங்கே பெண்ணுரிமை மற்றும் ஆண் - பெண் சமத்துவம் பற்றியும் சிந்தித்துள்ளன.

### தர்மசாஸ்திரங்கள்

தர்மத்தை விரிவாக எடுத்துரைப்பனவாக அமைந்த நூல்களை தர்மசாஸ்திரங்கள் எனலாம். வடமொழியில் "ஸ்மிருதி" என அழைப்பர். ஸ்மிருதி நூல்களானவை சூத்திரங்கள், சுலோகங்கள், வியாக்கியானங்கள் என்ற வடிவில் தம் கருத்தை வெளிப்படுத்தின.

### ஸ்மிருதி நூல்கள்

ஸ்மிருதி என்பதற்கு "நினைவில் வைக்கப்பட்டிருப்பது" அல்லது "வழிவழியாக வழங்கி வருவது" ( ரகுநாதன், டி. கே., ப. 38.) என்று பொருள். ரிஷிகளால் கற்பிக்கப்பட்டுச் சீடர்களால் நினைவில் கொள்ளப்பட்டவையை ஸ்மிருதி நூல்கள் எனச் சுட்டுவர். ஸ்மிருதி நூல்களுள் தர்மசாஸ்திரங்கள் அடங்கும். மனு, அத்திரி, விஷ்ணு, நாரதர், ஹரிதாசர், யாக்ஜவல்கியர், உசனர், ஆங்கீரசர், யமர், ஆபஸ்தம்பர், சம்வர்த்தர், காத்தியாயனர், பிரஹஸ்பதி, பராசரர், வியாசர், சங்கர், விகிதர், தக்கர், கௌதமர், சாதாதபர், வசிட்டர் ஆகியோரது ஸ்மிருதி நூல்களுள் மனுஸ்மிருதி, பிரஹஸ்பதி, காத்தியாயன ஸ்மிருதி ஆகியன முதன்மையானவையாக உள்ளன.

### ஸ்ருதி நூல்களில் பெண்

### மனுஸ்மிருதி

மனுஸ்மிருதியில், பன்னிரண்டு அத்தியாயங் களும் 2684 சுலோகங்களும் உள்ளன. (கி.மு 2ஆம் நூற்றாண்டு - கி.மு. 2ஆம் நூற்றாண்டு) இந்தியாவில் வரன் ஹேஸ்டிங் என்பவன் கவர்னராக நியமிக்கப்பட்ட போது அவன் நீதித் துறையில் மாற்றங்கள் செய்ய முற்பட்ட வேளையில், இந்தியச் சட்டங்களை வகுக்க மனுஸ்மிருதியினையே முதன்மையாகக் கொண்டான் எனக் கூறப்படுகிறது. அந்தளவிற்கு இந்நூலில் நீதி , நிர்வாகம், சட்டம் என்பன முதன்மை பெறுகின்றன. வில்லியம் ஜோன்ஸ் எழுதிய 'Asiatick Researchs' என்ற நூலில் மனுஸ்மிருதியும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது.

இந்நூலில் இடம் பெறும் பெண் பற்றிய சிந்தனைகளை நோக்கின், இந்நூல் ஆண்களை குடும்பத்தலைவனாக உயர் நிலையிலும் பெண்களை வீட்டுக்குரியவளாகவும் கணவனை வழிபட வேண்டியவளாகவும் விதவையாகின் மறுமணம் செய்ய உரிமையற்றவளாகவும் கூறுகிறது. மனுவின் நீதிப்படி பெண் என்றும் ஆணின் கட்டுப்பாட்டிலே வாழ வேண்டியவள் எனும்

நியதி நிலவுகிறது. ஏனெனில், பெண் இயல்பாகவே கட்டுப்பாடற்ற பாலின்ப வெறிபிடித்தவர், சிற்றின்பப் பிரியர், ஆடை ஆபரணங்களில் நாட்டமுள்ளவள், “சிற்றின்பம், இச்சை, கோபம், கபடம், கூடா இயல்பு கொண்டவள.” (கணேசலிங்கன், செ., 2000, பக். 29 - 30) ஆகவே, கட்டுப்படுத்தப்பட வேண்டியவள் என்கிறது அந்நூல். அதாவது, ஆண்களின் கட்டுப்பாட்டிலும் பாதுகாப்பிலும் கற்பொழுக்கத்துடன் கணவனுக்கு கீழ்படிந்து விசுவாசமாக வாழ வேண்டியவள் என்றதோடு, ஆணின் பாதுகாப்பில் இல்லாத பெண்ணினால் தன் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது எனக் கூறுகிறது.

**மனுஸ்மிருதியில் பெண் அடக்கு முறைகள்**

தனிச் சொத்துள்ள உயர்குடிப் பெண்கள் நீதி நெறிக்கும், பதிவிரதா தர்மத்திற்கும் கட்டுப்பட்டவர்கள் எனக் கூறியமை.

விதவைப் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்படல் ஆகாது. அப்பெண்களுக்கு ஆண் பிள்ளைகளுடன், கூட்டுக்குடும்ப உறவில் வாழும் உரிமைகளை அவர்களுக்கு வழங்கலாம். இருப்பினும், பெண்களின் உடல், பொருள், ஆவி அனைத்தும் ஆண்களது சொத்தாகக் கருதப்பட வேண்டும்.

கற்புள்ள மனைவியானவள் கணவனை தெய்வமாகக் கருதி அவனுக்கு சேவை செய்ய வேண்டும். அதாவது, கணவன் நற்குணமற்றவனாயினும் அவனுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும், அவனை விட்டு தன்னிச்சையாக எந்த தீர்மானங்களும் எடுத்தலாகாது. கணவனுக்கு கீழ்படியும் பெண்ணே சொர்க்கத்திற்கு செல்லத் தகுதி வாய்ந்தவள் எனப் பெண்ணடிமையினை வலியுறுத்தியமை.

“கணவனை இழந்த பெண்கள் எல்லா நலன்களையும் துறந்து விட வேண்டியவர்கள். தாமே அவர்கள் முடியைப் பிடித்து இழுத்து முண்டனம் செய்து வெள்ளை போர்தினார்.” (ராஜம் கிருஷ்ணன், 1989, ப. 114.) எனக் கூறி, விதவைப் பெண்களுக்கான உரிமைகளை மறுத்தமை.

மேலும், இந்நூலார் ஆணாதிக்க வெறி தர்மசாத்திரங்களில் புகுத்தப்பட்டமை பற்றித் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். பெண்களுக்கிழைக்கப்பட்ட இக்கொடுமை பற்றி, டாக்டர் அல்டேகர் அவர்கள் எழுதிய “இந்துநாகரிகத்தில் மகளிர் நிலை” என்னும் நூலில் விரிவாகக் கண்டு கொள்ளலாம் என ராஜம் கிருஷ்ணன் அவர்கள் காலந்தோறும் பெண் என்ற நூலில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாதவிடாயின் போது, பெண் ஒதுக்கி வைக்கப்பட்டதுடன், அவள் பிறரைத் தீண்டினால் குளிக்க வேண்டும் என்ற நியதி காணப்பட்டது. வேதங்களைக் கற்பதற்கும் சந்நியாசினி ஆவதற்கும் தடை விதித்ததோடு, மத நூல்களையும் மதம் சார்ந்த நிறுவனங்களுடன் நேரடித் தொடர்பு கொள்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஒரு ஆடவன் தன் மனைவியை வன்முறையினைப் பயன்படுத்திக் கூட தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்றளவில், பெண் அடக்கு முறை உச்சநிலையில் காணப்பட்டது. மேலும், “உயர் குடிப் பெண்ணின் சமய வாழ்வு கணவன் மூலமே ஏற்பட முடியும்.” (கணேசலிங்கன், செ., 2000, ப. 30.), என்ற வகையில், பெண்ணினத்தை ஆண், பெண் சமத்துவமற்ற ஆணாதிக்க அடிமை நிலையிலேயே மனுஸ்மிருதி எண்ணுகிறது.

**திருமணமும் பெண்ணுரிமையும்**

“திருமணம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காக சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்ட வினை முறையாகும்.” - பக்தவத்சலபாரதி.

“ஒரு பெண்ணுக்கு திருமணம் என்பது அவள் மனைவி என்கிற முறையில் கடமைகளைச் செய்ய வழிப்படுத்தும் சடங்காகும்.” - கிம்நாட்.

இந்து சமூகத்தில், திருமணத்தின் போது பெற்றோரின் சம்மதம் பிரதானமானதாகக் காணப்பட்ட போதும், பெண்ணின் விருப்பத்திற்கேற்பவே திருமணங்கள் நடைபெற்றன. தன் கணவனைத் தேர்ந்தெடுப்பதற்கு முழுமையான சுதந்திரம் பெண்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், திருமணத்தின் பின்னர் கணவனின் கட்டுப்பாட்டில் வாழவேண்டியவளாகக் காணப்பட்டாள்.

இந்நூல் அத்தியாயம் மூன்றில் எண்வகைத் திருமணங்கள் பற்றிக் கூறுகிறது. அவையாவன, பிராமம், தெய்வம், ஆருடம், பிரஜாபத்ம், ஆசுரம், காந்தருவம், இராட்சசம், பைசாசம் என்பனவாகும்.

பிராம விவாகம்: வலிய பிரமச்சாரியை அழைத்து புத்தாடை புனைவித்து ஆடை அணிகளால் அழகு செய்த பெண்ணைத் தானம் செய்வது.

தெய்வ மணம்: யாகத்தீயின் முன்னிருத்தி புரோகிதனுக்கு அலங்காரத்துடன் பெண்ணைக் கொடுத்தல்.

ஆருடம்: பெண்ணுக்குப் பரிசம் பெற்றுக் கொண்டு மணம் புரிவிப்பது.

பிரஜாபத்யம்: பிரமச்சாரியை அழைத்துப் பூஜித்து “நீவிர் இருவரும் அறங்களைப் புரிந்து வாழ்வீராக” என வாழ்த்திக் கொடுத்தல்.

ஆசுரம்: பெற்றவன் குறிக்கும் பொருட்களைக் கொடுத்து பெண்ணை வாங்கி, அணிகள் பூட்டி மணப்பது.

காந்தருவம்: ஆண், பெண் இருவரும் தம்மில் மனம் விரும்பி தாங்களாகவே கூடிச் சுகித்தல்.

இராட்சசம்: உறவினர்களை அடித்தும், கொன்றும் வன்முறையாக ஒரு பெண்ணை வீட்டிலிருந்து வலிமையாற் கவர்ந்து சென்று மணத்தல்.

பைசாசம்: தூக்கத்திலும் குடிவெறியிலும் பித்தம் கொண்டு இருக்கும் பெண்ணை கலப்பது: மணப்பது. (கணேசலிங்கன், செ., 2000, பக்.34 - 35.),

மேற்குறித்த திருமண முறைகளுள் இராட்சசம், பைசாசம் தவிர, ஏனைய திருமணமுறைகள் பெண்ணை மதிக்கும் வகையிலே உள்ளன.

மேலும், திருமணத்தின் போது பரிசுப் பொருட்களை மணமகளுக்கு அளிக்க வேண்டும். பெண் ஆடை ஆபரணங்களினால் தன்னை அழகுபடுத்திக் கொள்ள வேண்டும். அண்ணன் இறந்த பின்பு அவனுடைய மனைவியை திருமணம் புரியும் அவனது தம்பி அப்பெண்ணுடன் காமத்துடன் விளையாடல் ஆகாது, அவ்வாறு விளையாடினால் அவன் “திதிஷ்ஃப்தி” ( கணேசலிங்கன், செ., 2000, ப.35.), என அழைக்கப்படுவான் என இந்நூல் கூறுகிறது.

**பிரஹஸ்பதி மற்றும் காத்யாயன ஸ்மிருதியில் பெண் சொத்துரிமை**

பிரஹஸ்பதி ஸ்மிருதியானது ஆண் குழந்தை இல்லாத ஒருவனுக்கு அவனுடைய மனைவியே அடுத்த வாரிசாக இருக்க வேண்டும் என்பது இந்நூலாரது கொள்கையாகும். காத்யாயனஸ்மிருதியானது "சௌதாயிக" (முகுந்தன், ச., 2014, ப. 3.) எனும் சொத்துரிமையில் பெண்ணுக்கே முழு உரிமையினையும் அளிக்கிறது. மேலும், கணவன், மகன் ஆகியோர் உரிமை கோர முடியாது என்றதுடன், சீதனம் உள்ளிட்ட அசையும் அசையாச் சொத்துகளுக்கு அவளே உரித்துடையவள் என்கிறது. அதாவது, கணவன் இறந்துவிட்டால் அவனது மனைவிக்கே சொத்துரிமையினை வழங்க வேண்டும் என விளம்புகிறது.

**முடிவுரை**

தர்மசாஸ்திரங்களுள் மனுஸ்மிருதியானது, பெண்ணினத்தை ஆண், பெண் சமத்துவமற்ற ஆணாதிக்க அடிமை நிலையிலேயே நோக்குகிறது. ஆனால், பிரஹஸ்பதி ஸ்மிருதியும் காத்யாயனஸ்மிருதியும் பெண்ணை மிகவும் உயர்நிலையில் சிந்தித்துள்ளமையினைக் காணலாம். இம்மூன்று ஸ்மிருதி நூல்களுள், மனுஸ்மிருதியைக் காட்டிலும் பிரஹஸ்பதி ஸ்மிருதியும் காத்யாயனஸ்மிருதியும் பெண் சொத்துரிமை (Women's Rights in Propert) பற்றி பேசுவதில் தனித்துவமான இடத்தினைப் பெறுகின்றன.

## பார்வை நூல்கள்


கணேசலிங்கன், செ., (2000). பெண்ணியப் பார்வையில் திருக்குறள், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, தமிழ் நாடு.

கோவிந்தன், க., (2001). தமிழ்த் திரைப்படங்களில் ஆண் - பெண் பால்பேதம், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, தமிழ் நாடு, இந்தியா.

சிவசாமி.வி., கணேசலிங்கம், ப., (பதிப்பு), (2005). இந்துப் பண்பாடு - அன்றும் இன்றும், மீரா /பைன் ஆட்ஸ், சிவகாசி, தமிழ் நாடு, இந்தியா.

தங்கவேலு, கோ., (1976). இந்திய வரலாறு, தொகுதி -1, பழனியப்பா பதிப்பகம், தமிழ் நாடு, இந்தியா.

திரிலோக சீதாராம். (1989). மனுதர்ம சாஸ்திரம், வெற்றி அச்சகம், சென்னை, தமிழ் நாடு.

மதுகிஷ்வர். (1994). இந்துச் சட்டத் தொகுப்பும் மாயையும் எதார்த்தமும், விடியல் பதிப்பகம், கோவை, தமிழ் நாடு.

முகுந்தன், ச., (2014). இந்து இலக்கியங்களில் பொருளியல் அரசியல் நீதிபரிபாலனம், பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, இலங்கை.

முத்துச்சிதம்பரம், ச., (1999). பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் புத்தகாலயம், சென்னை, தமிழ் நாடு.

ரகுநாதன், டி. கே., (தமிழில்), கிம்நாட் இந்துமதம் மிகச் சுருக்கமான அறிமுகம், அடையாளம், தமிழ் நாடு, இந்தியா.

ராஜம் கிருஷ்ணன். (1989). காலந்தோறும் பெண், சென்னை, தமிழ் நாடு, இந்தியா.

## To cite this article

*****************

Selvakumari Sivaligam, & Jasmin Sudha, T. K. (2024). தர்மசாஸ்திரங்களில் பெண்: தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்மிருதி நூல்களை மையப்படுத்திய ஆய்வு. *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 7*(1), 24-29.

*****************************************************************************************

## ABOUT THE AUTHORS



***Selvakumari Sivaligam*** *is a Senior Lecturer in the Department of Hindu Civilizations at the South Eastern University of Sri Lanka, Sri Lanka and she holds BA and MA from the University of Jaffna, Sri Lanka. Currently, she is doing her Ph.D research on "Ritual Patterns in Jainism: A Study with a Focus on Silapathikaram and Sivakacintamani" Under the guidance of Jasmin Sudha, Assistant Professor, Department of Tamil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India. She is involved in the fields of religion, philosophy, feminism and social harmony. She has published research papers in journals and regularly participated and presented papers in the National and International Conference.*



***Dr T. K. Jasmin Sudha*** *is an Assistant Professor and Head i/c, Department of Tamil, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu. She completed M.A., M.Phil., Ph.D., NET in Tamil. She has participated and presented papers in National and International Conferences. She has written more than 50 research articles and she has also written three books, Historical Thoughts in D.P.Perumal's Novels, Poet D.P.Perumal's Works - A Study, Bhakti Literature and Sangha Literature in Multifaceted Perspectives. She has visited Malaysia twice in connection with the World Tamil Research Conference and Seminar.*

*****************************************************************************************